





Pravasi Bharatiya Divas

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2019

*We Are Here..!! To Guide You..!!*

TAMIL NADU GLOBAL INVESTORS MEET 20

INVESTORS' PARADISE








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 14.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- இந்திய நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்








## இந்திய நிகழ்வுகள்

- தஞ்சாவூர் மாவட்டம் **திருப்புவனத்தில்** வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படும் **திருப்புவன பட்டுச் சேலைக்கு புவிசார் குறியீடு** வழங்கப்பட்டுள்ளது.
  - மேலும் கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த **உத்திரகாண்டா** மாவட்டத்தில் விளையக்கூடிய **சிர்சி சுப்பாரி (SIRSI SUPARI) என்ற பாக்கு (Arecnut) வகைக்கு புவிசார் குறியீடு** வழங்கப்பட்டுள்ளது.
  - சமீபத்தில் ஈரோட்டில் விளையக்கூடிய "ஈரோடு மஞ்சளு"க்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- **அயோத்தி ராம ஜென்ம பூமி பிரச்சனைக்கு** தீர்வு காண்பதற்கு முன்னாள் **உச்சநீதிமன்ற நீதிபதி "இப்ராகிம் கலிபுல்லா தலைமையில் 3 பேர் கொண்ட குழுவை** உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.
  - மற்ற இரு உறுப்பினர்கள்
  - 1) ஸ்ரீ ரவிசங்கர்
  - 2) ஸ்ரீ ராம் பஞ்ச்

- டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் **வணிக வாய்ப்புகளை உருவாக்குவதற்கான, இண்டர்நெட் ஆப் திங்ஸ்** (IoT – Internet of Things) இந்திய காங்கிரஸ் மாநாட்டின் **4வது பதிப்பு பெங்களுரில்** நடைபெற்றது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **நிலவின் பகல்பொழுது தோன்றும் பகுதியில் நீர் மூலக்கூறுகள்** சுற்றி வருவதாக நாசாவின் நிலவு **உலவுப்பணி விண்கலமான "LRO"** – (Lunar Reconnaissance Orbiter) கண்டறிந்துள்ளது.
  - நிலவில் கண்டறியப்பட்டுள்ள இந்த நீரானது எரிபொருள் தயாரிப்பதற்கு அல்லது சூரியக் கதிர்களிலிருந்து பாதுகாப்பதற்கு மனிதர்களால் பயன்படுத்த தகுதியுடையது.

## விருதுகள்

- **மகாராஷ்டிரா** மாநிலத்தின் **முதலாவது முதலமைச்சர் சவான் நினைவாக** வழங்கப்படும் **யஸ்வந்த் ராவ் சவான் தேசிய விருதானது**, முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் **ரகுராம் ராஜனுக்கு** வழங்கப்பட்டுள்ளது.
    - இவர் பொருளாதார வளர்ச்சிக்கு அவர் அளித்த பங்களிப்பிற்காக 2018ம் ஆண்டிற்கான யஸ்வந் ராவ் சவான் தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.
    - ரிசர்வ் வங்கியின் தற்போதைய ஆளுநர் - சக்தி காந்த தாஸ்

- 2019ம் ஆண்டு மார்ச் 11 அன்று **இந்தியாவின் உயரிய குடிமக்கள் விருதுகளில் ஒன்றான பத்ம விருதுகளை 112 நபர்களுக்கு** இந்திய குடியரசுத் தலைவர் வழங்கினார்.
    - இவ்விருதுகளில், பத்ம ஸ்ரீ விருதானது முதன்முதலாக திருநங்கையான நர்த்தகி நடராஜ் (Nartaki Natraj) உள்பட 94 பேருக்கு வழங்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **தேசிய புகைபிடித்தல் இல்லாத நாள் - மார்ச் 13, 2019 (National No Smoking Day)**
    - புகைப்பிடிப்பதால் உடலில் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் "மார்ச் இரண்டாவது புதன்கிழமை" (2019ல் மார்ச் 13) புகைபிடித்தல் இல்லாத நாளாக அனுசரிக்கப்படுகிறது.
    - இத்தினமானது 1985 ஆண்டிலிருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.
    - உலக புகையிலை இல்லா நாள் (World No Tobacco Day) ஆண்டுதோறும் மே – 31 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

- **தண்டியாத்திரை தொடங்கிய நாள் - மார்ச் 12**
    - இந்தியர்கள் மீது விதித்த உப்புவரியை எதிர்த்து அறவழியில் காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற போராட்டம் உப்பு சத்தியாகிரகம் அல்லது தண்டியாத்திரை ஆகும்.
    - இப்போராட்டமானது மார்ச் 12, 1930 முதல் ஏப்ரல் 6, 1930 வரை தடையை மீறி உப்பெடுக்கும் நடைபயணமாக தொடர்ந்தது.